**கவனிக்க**.- *2008.02.01 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II, பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1536 - 2008 පෙබරවාරි 08 වැනි සිකුරාදා - 2008.02.08

*1536 ஆம் இலக்கம் – 2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 132 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 134 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும். வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, பெப்புருவரி 15 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, பெப்புருவரி 01 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது:-*

*கம்பனியின் பெயர் :* சிறீ சரஸ்வதி ஹோட்டல் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் :* பீவீ 62543
*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 28.12.2007
*பதிவு செய்யப்பட்ட முகவரி :* இல. 255, செட்டியார் தெரு, கொழும்பு 11.

கம்பனிச் செயலாளர்கள்.
அமல்கமேற்றட் மனேஜ்மென்ட் சேவிசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
96 – 2/2, மல்வத்தை ரோட்,
கொழும்பு 11,
04.01.2008.

2–203

## அட்டோர்ணி தத்துவத்தை இல்லாதொழித்தல்

தற்பொழுது இல. 39/ 3, பிளவர் வீதி, கொழும்பு 7 என்னும் முகவரியைச் சேர்ந்த தினேஷ் ஷாப்டர் ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு ஏ. என். எஸ். கருணாரத்ன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் இல. 105, இசிபத்தான மாவத்தை, கொழும்பு 5 எனும் முகவரியைச் சேர்ந்த ஹெட்டி பத்திரரென்னஹேலாகே அஜித் குணவர்தன என்பவருக்கு வழங்கப்பட்டதுமான 17.08.2006 ஆந் திகதி கொண்ட 140 ஆம் இலக்க அட்டோர்ணி தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்தும் இல்லாதொழித்தும் விடுகின்றேன் என சொல்லப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் சம்பந்தப்பட்ட ஏனைய அனைவருக்கும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

இனிமேலாக சொல்லப்பட்ட அட்டோர்ணித் தத்துவம் சட்டத்தில் பயனும் வலுவும் கொண்டிருத்தலாகாது. சொல்லப்பட்ட அட்டோர்ணித் தத்துவத்தின் நியதிகளின்படி எனது சார்பில் சொல்லப்பட்ட அட்டோர்ணித் தத்துவங்களினால் செய்யப்படக்கூடிய அல்லது மேற்கொள்ளப்படக்கூடிய எவையேனும் வருங்காலச் செயல்களுக்கு அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கு நான் பொறுப்பாளியாக மாட்டேன்.

தினேஷ் ஷாப்டர்.

2–217

## அட்டோர்ணி தத்துவத்தை இல்லாதொழித்தல்

தற்பொழுது இல. 39/3, பிளவர் வீதி, கொழும்பு 7 என்னும் முகவரியைச் சேர்ந்த தினேஷ் ஷாப்டர் ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு ஏ. என். எஸ். கருணாரத்ன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் இல. 10/1, வீர மாவத்தை, சுபோதிபுர, பத்தரமுல்ல எனும் முகவரியைச் சேர்ந்த ஹார்ஷா நிலந்த டீ சில்வா என்பவருக்கு இல. 15ஏ, ஏக்கநாயக அவென்யூ, நுகேகொடை என்னும் முகவரியைச் சேர்ந்த மஞ்சுளா மத்தியூஸ் என்பவருக்கும் வழங்கப்பட்டதுமான 21.11.2005 ஆந் திகதி கொண்ட 115 ஆம் இலக்க அட்டோர்ணி தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்தும் இல்லாதொழித்தும் விடுகின்றேன் என சொல்லப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் சம்பந்தப்பட்ட ஏனைய அனைவருக்கும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

இனிமேலாக சொல்லப்பட்ட அட்டோர்ணித் தத்துவம் சட்டத்தில் பயனும் வலுவும் கொண்டிருத்தலாகாது. சொல்லப்பட்ட அட்டோர்ணித் தத்துவத்தின் நியதிகளின்படி எனது சார்பில் சொல்லப்பட்ட அட்டோர்ணித் தத்துவங்களினால் செய்யப்படக்கூடிய அல்லது மேற்கொள்ளப்படக்கூடிய எவையேனும் வருங்காலச் செயல்களுக்கு அல்லது கொடுக்கல் வாங்கல்களுக்கு நான் பொறுப்பாளி யாகமாட்டேன்.

தினேஷ் ஷாப்டர்.

2–218

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

பொரலஸ்கமுவை, அம்பகஹபுர, கட்டுவாவல ரோட், 30/101 ஐ சேர்ந்த சமரவீர முதலிகே சாருணி சஞ்சீவனி சமரவீர (அடையாள அட்டை இல. 756141708V) ஆகிய நான் பொரலஸ்கமுவை, ஜயமாவத்தை, இல. 16 ஐச் சேர்ந்த (அ. அ. இல. 421627720V) என்பவருக்கு வழங்கிய பகிரங்க நொத்தாரிசு எம். எச். டீ ஏ. அமரசேக்கரவினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2003, செத்தெம்பர் 23 ஆந் திகதிய மதிப்பீட்டு இல. 6697 கொண்ட அட்டோர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்து செல்லு படியற்றதாக்கு வதாக இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசுக்கு இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

இத்திகதி முதல் சொல்லப்பட்ட அம்பலங்கொட குரன்னான்சேலாகே லக்ஷ்மன் பெரேராவினால் மேற்கொள்ளப்படும் அல்லது நிறை வேற்றப்படும் எந்த விடயங்கள் அல்லது செயற்பாடுகளுக்கு நான் பொறுப்பாக மாட்டேன்.

சமரவீர முதலிகே சாருணி சஞ்சீவனி சமரவீர.

2008, சனவரி 14.

2–219

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், 2007, திசெம்பர் 11 ஆந் திகதி தனியார் வரையறுக்கப்பட்ட கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டதற்கான அறிவித்தல்*

*கம்பனியின் பெயர் :* கன்சாய் லங்கா பியோகி இன்ரநயுனல் (பிறைவேட்) லிமிட்டெட்

*கம்பனி இல. : பீவீ 62351*
*பதிவு அலுவலகம் :* இல. 188, போரே, அத்துருகிரிய.

ஜி. வீ. ஜே. ஏ. கொடகம,
பணிப்பாளர்.

2–237

---

## பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்படல் தொடர்பான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவான அறிவித்தல் வருமாறு :-

*கம்பனியின் பெயர் :* எச்செனிட் (hsenid) மொபைல் சொலூயூசன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இல.:* பீவீ 62579
*திகதி :* 02.01.2008
*கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி :* எச்செனிட் (hsenid) மொபைல் சொலூயூசன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், இல. 85 1/1, வோர்ட் பிளேஸ், கொழும்பு 07.

செயலாளர்கள்,
பிஸ்னஸ்மேட் (பிரைவேற்) லிமிட்டெட் .

இல. 45, பிரேபுறூக் வீதி, கொழும்பு 02.
10 சனவரி, 2008.

2–266

---

## பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டது தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் நியதிகளுக்கமைவான அறிவித்தல் தரப்படுகின்றது.

*கம்பனியின் பெயர் :*புறொம்பில் ஓர்தோடொக்ஸ் அன்ட் சீடிசீஉ பெக்டரி (பிரைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இல.:* PV 62675
*திகதி :* 10.01.2008
*கம்பனியின் பதிவு செய்த அலுவலக முகவரி :* புறொம்பில் ஓர்தோடொக்ஸ் அன்ட் சீ.டி. சீ.உ. பெக்டரி (பிரைவேட்) லிமிட்டெட், இல. 40/9, லேக் கார்டன், இராஜகிரிய.

செயலாளர்கள்,
பிஸ்னஸ்மேட் (பிரைவேற்) லிமிட்டெட் .

இல. 45, பிரேபுரூக் வீதி, கொழும்பு 02.
17 சனவரி, 2008.

2–267

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் அடிப்படையில் கீழ் குறிப்பிட்டுள்ள கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளன என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம்.

*கம்பனியின் பெயர் :* டொனி அன்ட் ரியலிட்டி கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் :* பீவீ 62605
*திகதி :* 04.01.2008
*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி :* 209, "சதகெமும்", போகுந்தர, பிலியந்தலை.

*கம்பனியின் பெயர் :* பில்ம் கவுன்சில் புரொடக்சன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் :* பீவீ 62702
*திகதி :* 04.01.2008
*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி :* 23/36, மஞ்சநாயக கார்ட்ன்ஸ், பாகொட, நுகேகொட.

*கம்பனியின் பெயர் :* நெஸ்சல் ஹோல்டிங் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் :* பீவீ62762
*திகதி :* 21.01.2008
*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி :* 162, நாவல வீதி, நுகேகொடை

*கம்பனியின் பெயர் :* பிரேவோ சீரோ, செக்குரிட்டி அன்ட் ஸ்பெஷல் சேவிசர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் :* பீவீ62605
*திகதி :* 21.01.2008
*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி :* 6/1, அமரசேகர வீதி, கொழும்பு 6

செயலாளர்கள்,
எக்கவுன்டன்சி அன்ட் செக்ரெட்டேரியல்,
சேர்விசஸ் பியுரோ லிமிட்டெட்,

86, எஸ். டி. எஸ். ஜயசிங்ஹ மாவத்தை,
கொஹுவல, நுகேகொட,
2007, திசெம்பர் 3.

2–269

---

## அட்டோர்ணி பத்திரத்தை ரத்துச்செய்தல்

இலங்கை அரசாங்கத்துக்கும் பொது மக்களுக்கும் இவ்வறிவித்தலின் மூலம் தெரியப்படுத்துவதென்னவென்றால், இல. 1055/2, மருதானை வீதி, பொரள்ளை, கொழும்பு 8 இல் வசிக்கும் மரியதாஸ் அன்ரூ ரொஹான் மைக்கல் (தேசிய அடையாள அட்டை இல. 672980895X) ஆகிய நான், இல. 1055/2, மருதானை வீதி, பொரளை, கொழும்பு 8 இல் வசிக்கும் மரியதாஸ் அன்டனட் தனுஜா மைக்கல் (தேசிய அடையாள அட்டை இல. 705131902 V) அவர்களால் நியமிக்கப்பட்ட கடந்த 2000 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான திரு. துலாவன்ச நந்தசேன ஜயசூரிய அவர்களால் கையொப்பமிட்டு உறுதி செய்யப்பட்ட இல. 48 ஆம் இலக்க அட்டோர்ணி பத்திரத்தை இவ்வவசர அறிவித்தலின் மூலம் ரத்துச் செய்கிறேன். இவ்வட்டோர்ணி பத்திரம் கொழும்பு 1 இல் அமைந்துள்ள பதிவாளர் நாயக அலுவலகத்தில் நாள் புத்தக இல. 488 இல் புத்தக இல. 206 இல், 98 ஆம், பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இதன் மூலம்

என்மீதுள்ள சகல உறுதியதிகாரங்களையும் இவ்வறிவித்தலின் மூலம் இன்று முதல் ரத்துச் செய்கிறேன்.

எம். ஏ. ரொஹான் மைக்கல்.

2-280

---

**அட்டோர்ணி தத்துவத்தினை இரத்துச்செய்தல்**

இல. 9/5, ஹர்மர்ஸ் அவனியு, வெள்ளவத்தை, கொழும்பு 6 ஜச் சேர்ந்த மருதப்பு திருஞானசம்பந்தர் பெண் தனலெட்சுமி ஆகிய நான், இல. 9/5, ஹர்மர்ஸ் அவனியு, வெள்ளவத்தை, கொழும்பு 6 ஜச் சேர்ந்த மருதப்பு திருஞானசம்பந்தர் என்பவருக்கு வழங்கிய கொழும்பு பிரசித்த நொத்தாரிசு பி. என். தம்பு என்பவரினால் இல. 363, 2007.05.31 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் கொழும்பு பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் 2007.06.06 ஆந் திகதி தொகுதி 47 பக்கம் 360 இல. 6144 இன்கீழ் பதிவு செய்யப்பட்டதுமான அற்றோர்ணித் தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்கின்றேன் என்றும் இன்றிலிருந்து குறித்த தத்துவக்காரரினால் என் சார்பில் செய்யப்படும் எந்த செயலுக்கும் நான் பொறுப்பெடுக்க மாட்டேன் என்றும் அத்தகைய செயல்களெதனையும் நான் ஏற்றங்கீகரிக்கமாட்டேன் என்றும் இத்தால் பொது மக்களுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் அறியத்தருகிறேன்.

மருதப்பு திருஞானசம்பந்தர் பெண் தனலெட்சுமி.

2-287

---

# ஏல விற்பனைகள்

**மக்கள் வங்கி - செங்கடகல கிளை**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

**கண்டி, கட்டுகெலே, சிரிமாவோ ஆர். டி. பண்டாரநாயக்க மாவத்தையில் (பேராதனை கிளை) அமைந்துள்ள ஆதனம் ஏலவிற்பனை**

உத்தரவுபெற்ற அளவையாளரான பர்னாட் பி. ரூபசிங்ஹ அவர்களால் 1995.05.31 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 1484 ஆம் இலக்கங் கொண்ட மூல வரைபு படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 01 ஆம், 03 ஆம் லொட் இலக்கங்களைக் கொண்ட எட்டு தசம் நான்கு நான்கு பேர்ச்சஸ், (0ஏ. 0று. 8.44பே.) விசாலமுள்ள காணி மற்றும் அதற்குள்ளே அமைந்துள்ள கட்டிடங்கள் மக்கள் வங்கி மூலம் எமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் எங்களால் 2008 பெப்புருவரி மாதம் 29 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு பிரசித்த ஏலத்தில் ஆதனம் அமைந்துள்ள இடத்திலேயே விற்பனை செய்யப்படும்.

**மேலதிக விபரங்களுக்காக**.- 2007.11.02 ஆந் திகதி அரச வர்த்தமானியிலும் 2007.12.03 ஆந் திகதிய "தினமின", "டெய்லி நியூஸ்" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டிருக்கும் ஏலவிற்பனை தீர்மான அறிவித்தலுக்கு கவனம் செலுத்தவும்.

**ஆதனத்திற்குச் சென்றடைகின்ற விதம்**.-கண்டி கட்டுகெலே சிரிமாவோ ஆர். டீ. பண்டாரநாயக்க மாவத்தையில் (பேராதனை வீதி) 87ஆம், 87/2 ஆம் வரிப்பண, இலக்கங்களைக் கொண்ட இடத்தில் மேற்கூறப்பட்ட ஆதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் முறை**.- ஏலவிற்பனையின் இறுதியின் போது கொள்வனவாளர் மூலம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் பணத்தில் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 10&;

(2) மாகாண அதிகார சபையின் குத்தகையாக மாகாண அதிகார சபைக்கு 1&;

(3) ஏலதாரரின் கொமிஸ் கட்டணமாக விற்பனை விலையில் 2 ½;

(4) இலிகிதர் அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 உம் ;

(5) விற்பனை செலவு மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அப்பணத்தொகையும் கொள்வனவு விலையில் மிகுதியை 90& ஆகிய தொகையும், விற்பனை தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் கண்டி மக்கள் வங்கி பிரதேச பிரதான அலுவலகத்திற்குச் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. 081-2234283, பெக்ஸ் : 081-2223017.

உரிமை ஒப்பனைகளும் ஏனைய அதற்கான விபரங்களும் மேற்குறிப்பிட்ட விலாசத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். மேற்குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள பணம் 30 நாட்களுக்குள் செலுத்தாவிட்டால் தற்போதைக்குச் செலுத்தப்பட்டிருக்கும் கொள்வனவு விலையில் 10& தொகைப் பணத்தை மீண்டும் செலுத்தாமல் விடுவதற்கும் ஆதனத்தை விற்பனை செய்யும் உரிமையும் மக்கள் வங்கிக்கு உண்டு.

ஷொக்மன் உம் சமரவிக்ரம,
அரசஅனுமதிபெற்ற I.S.O. 9001:2000 சான்றிதழ் பெற்ற
இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முன்னணியில்
திகழும் ஏலதாரர்களும், மதிப்பீட்டாளர்களும்
மற்றும் ஆதன தரகர்களும்.

| பிரதான அலுவலகம் மற்றும் காட்சியறை: | நகர அலவலகம் மற்றும் காட்சியறை: |
| --- | --- |
| இல. 24, டொரிங்டன் வீதி, கண்டி, | இலக்கம் 290, ஹெவ்லொக் பாதை, கொழும்பு 05. |
| தொலைபேசி : 081-2224371, 081-2227593, | தொலைபேசி 011-2585408, 011-2502680 |
| பெக்ஸ் இல. : 081-2224371 | பெக்ஸ் : 011-2588176 |
| | ஈமெயில் : schokman@samera 1892. com |

2-229

**றுஹுஹுண அபிவிருத்தி வங்கி - கெகனதுர கிளை**

*1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் விசேட (ஏற்பாடுகள் சட்டத்தின்) 4 ஆவது அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள் ஏல விற்பனை**

*றுஹுஹுண அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி இங்கு கீழ் குறிப்பிட்ட சொத்துக்கள் 2008.02.28 ஆந் திகதி மு. ப. 10.30 க்கு சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.*

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்.**- *தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்திலே வெல்லபட பத்துவையில் பம்பரென்ததம்யன்கொட என்ற ஊரில் அமைந்துள்ள வடிகாவ கெதரவத்த எனும் காணிக்கு மாத்தறை மாவட்ட நீதிமன்றத்தில் இருக்கின்ற இலக்கம் பி, 11841 என்ற வழக்கின் இறுதி தீர்மானத்தின் படி அதிகாரம் பெற்ற அளவையாளரான எம். விமலசூரிய அவர்களினால் அளந்து ஒழுங்கு செய்யப்பட்ட இலக்கம் 2713 ஏயும் 1991.12.26 ஆந் திகதி வரைபடத்தின் பிரகாரம், பிரித்து வேறாக்கப்பட்ட இலக்கம் 5 என்ற 2 றூட், இருபது தசம் எட்டு ஐந்து எட்டு பேர்ச்சஸ் (0ஏ. 2றூ. 20.858பே.) மிகப் பெரிய காணியும், அங்குள்ள அனைத்து பயிர்ச்செய்கை, கட்டிடங்கள் போன்ற அனைத்துமாகும்.*

**மேலதிக விபங்களுக்கு.**-*2007.10.05 ஆந் திகதியின் அரச வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலுக்கிணங்க 2007.11.22 ஆந் திகதியின் "தினமின", "த ஐலன்ட்" மற்றும் "தினகரன்" எனும் சஞ்சிகைகளிலும், பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனை பகுதியை கவனிக்க.*

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.**-*கெகனதுர திக்வெல்ல (வேஹல்ல) பாதையில் நெலுவ வெவஅம்பலம் அருகே வலப்பக்கமாக விழும் வழியே 300 மீ. அளவு செல்ல விழும் மண்பாதையில் 200 மீ. அளவு தூரம் செல்ல இச்சொத்துக்கள் தென்படும்.*

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**-*ஏலவிற்பனை தீர்ந்துவிட்டதும் வெற்றிபெற்ற கொள்வனவாளரினால் கீழ்கண்டபடி பணமாக செலுத்த வேண்டும்:-*

*(1) கொள்வனவு விலையில் 25&;*

*(2) உள்ளூர் அதிகாரியின் வரியாக உள்ளூர் அதிகாரசபைக்கு 1&;*

*(3) ஏலவிற்பனையாளர் தரகு என விற்பனை விலையில் 2 1/2 &;*

*(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணம் ரூ. 500 ;*

*(5) விற்பனை செலவும், இதர செலவுகள் இருப்பின் அவையும்;*

*(6) விற்பனை உறுதிப் பத்திரத்திற்கான முத்திரைக் கட்டணம்.*

*கொள்வனவு விலையில் மீதி 75% க்கான பணத்தை விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மாத்தறை, பம்புரண, றுஹுஹுண அபிவிருத்தி வங்கியின் பிரதான தலைமை அலுவலகத்திலே தலைவர் அவர்களுக்கு செலுத்துக.*

*மேற்படி 30 நாட்களுக்குள் குறிப்பிட்ட பணத்தை செலுத்தத் தவறின் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 25% க்கான பணத்தை மீண்டும் செலுத்தாது விடவும் மீண்டும் அவற்றை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.*

*உரிமை கோரும் ஒப்பினையையும் மேலதிக விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம். தொலைபேசி இலக்கம் : 041-2231532, 2226208, 2226209, 2264457.*

*ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்),*
*அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளர்,*
*நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.*

*குருந்துவத்த,*
*வல்கம,*
*மாத்தறை.*
*தொலைபேசி இலக்கம் : 041-2228731*

*2-192*

---

**ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சீ – வெல்லவாய கிளை**

*(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி என்று அறிமுகப்படுத்தப்பட்டது)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அளவிடுதல் (விசேஷட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்*

**பெறுமதியான சொத்தின் ஏல விற்பனை**

**உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. ஜீ. சீ. புஷ்பகுமார அவர்களால் 2003.06.22 ஆந் திகதிமிடப்பட்டு தயாரிக்கப்பட்ட வரைபட இல. 2866 இல் துண்டு 1 எனக் குறிக்கப்பட்ட 'அனபல்லமெஹென்யாய' என்ற காணியிலிருந்தும் வெளியிலிருந்தும் அழைக்கப்படும் பிரிக்கப்பட்ட, நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு, கட்டிடங்கள் மற்றும் அதிலுள்ள அனைத்துமுடன், ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டத்தில் வெள்ளவாய கோரளையில் வெள்ளவாயவில் அல்லது பிரதேச செயலகப் பிரிவில் வெள்ளவாயவில் அல்லது பிரதேச சபை எல்லைக்குள் அனபல்லம கிராம சேவையாளர் பிரிவில் கண்டியயாயகமவில், குறித்த உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. ஜீ. சீ. புஷ்பகுமார அவர்களால் 2003.06.22 ஆந் திகதிமிடப்பட்டுத் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 2866 இல் குறிப்பிடப்பட்ட பாதைக்கான உரிமையுடன் அமைந்துள்ளது.**

**விஸ்தீரணம் : 2 ஏக்கர்கள்**

ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். ஸீ. யால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் மேலே விவரிக்கப்பட்ட சொத்தை, அதே இடத்தில் 2008 பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதி மு. ப. 11. 00 மணிக்கு நான் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.

*கடமைப்பட்டவரும், சொத்தை ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். ஸீக்கு ஈடுவைத்தருமான தென்னக்கோன் முதியன்சலாகே திஸ்ஸ நிலந்த தென்னகோன் பண்டாரவளை பிரசித்த நொத்தாரிசு என். கே. லியனகே அவர்களால் 2003.08.29 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட முறிஇல. 895 மற்றும் பண்டாரவளை பிரசித்த நொத்தாரிசு என். சீ. ஜே. பீரிஸ் அவர்களால் 2004.08.09 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட முறி இல. 12592 என்பவற்றில் கொடுப்பனவு தவறியுள்ளார்.*

**தீர்மான அறிவித்தலுக்காக.**- *தயவுசெய்து 2007.10.19 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2007.11.19 ஆந் திகதிய "ஜலண்ட்" "திவயின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- ஏலத்தினிறுதியில், சித்திகரமான கொள்வனவாளர் பின்வரும் தொகைகளைப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் 10% ;

(2) உள்ளூராட்சிகளுக்கான ஒரு வீதம் 1% ;

(3) ஏலதாரர் தரகுப் பணமாக,கொள்வனவு விலையின் இரண்டரை வீதம் 2 ½% ;

(4) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக்கட்டணமாக ரூபா 2,000 ;

(5) கிளார்க், கூவுவோர் வேதனம் ரூபா 500 ;

(6) மொத்த விளம்பரச் செலவு.

விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள்,கொள்வனவு விலையின் எஞ்சிய 90% ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். ஸீ. யில் வைப்பிலிட வேண்டும்.

மேலதிக விபரங்கள், காணி உறுதி, தொடர்புடைய ஆவணங்களை "ஹட்டன் நஷனல் வங்கி, பீஎல்சீ தலைமையகம், கடன் மேற்பார்வை, மீள் பெறுகைத் திணைக்கள பிரதம முகாமையாளர்" இடம் பரீட்சித்துப் பெறலாம். தொலைபேசி இல.: 2661815, 2661816.

ரஞ்ஜித் எஸ் மஹாநாம,
சமாதான நீதவான் (அகில இலங்கை)
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர், ஏலதாரர்.

மஹாநாம ட்றைவ்,
இல. 474, பிட்டகோட்டே,
கோட்டே.
தொலைபேசி இல. : 2863121

2-239

---

**பான் ஏசியா பாங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ**

(முன்னர் பான் ஏஷியா பாங்க் லிமிட்டெட் மற்றும் பான் ஏஷியா பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டெட் என அழைக்கப்பட்டு வந்தது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம்இலக்க வங்கிக்கடன் மீட்புச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை

**மீளளிக்கப்படாத சொத்து ஏல விற்பனை**

**அனுமதிப்பத்திரம் பெற்ற நிலஅளவையாளர் எச். சொக்மன் அவர்களால் வரையப்பட்ட 1964 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15 ஆந் திகதியிடப்பட்ட வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பஸ்பாகே கோரளே பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட, அம்பகமுவவில் அமைந்துள்ள, லோவர் டிவிஷன், கலபொட டிவிஷன், அப்பர் டிவிஷன் ஆகியவற்றை உள்ளடக்கிய 'கலபொட எஸ்டேட்' என அழைக்கப்படும் காணி.தேயிலை மற்றும் ஏனைய தோட்டங்கள், தொழிற்சாலைக் கட்டடங்கள் பங்காளாக்கள் ஏனைய கட்டடங்கள் மற்றும் அங்குள்ள அனைத்தும் உள்ளடங்கலாக.**

**காணியின் விஸ்தீரணம் : 859ஏ. 01றூ. 34பே.**

**இந்த இடத்திற்குச் செல்வதற்கான வழியும் அங்கிருந்து பல்வேறு முக்கிய இடங்களுக்கான தூரங்களும்.**-கொழும்பில் இருந்து கொழும்பு - இரத்தினபுரி, மட்டக்களப்பு ஏ4 நெடுஞ்சாலை ஊடாக, அவிஸ்ஸாவெல வரை சென்று, அங்கிருந்து அவிஸ்ஸாவெல- ஹட்டன் ஏ7 நெடுஞ்சாலை ஊடாக கினிகத்ஹேன வரை சென்று, அங்கிருந்து 12.3 கிலோ மீற்றர் வரை சென்று, 59/12 ஆம் இலக்க மதகுக்கு வலதுபுறம் திரும்பி, ரொஸல்ல வீதி ஊடாக ரயில் கடவையைத் தாண்டி, சுமார் 8 கிலோ மீற்றர் தூரம் சென்றதும், குறித்த கலபொட தோட்டத்தை அடைய முடியும். இந்தக் காணியில் இருந்து ஹட்டனுக்கு சுமார் 18.5 கிலோ மீற்றர் தூரம் கினிகத்ஹேனவுக்கு 22 கிலோ மீற்றர் தூரம். கொழும்புக்கு 124.5 கிலோ மீற்றர் தூரம்.

*(கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். ஜ. சமரசிங்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1999 ஆம் ஆண்டு யூன் 24 ஆந் திகதி மற்றும் 2001 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதியிடப்பட்ட, 737 ஆம் இலக்க மற்றும் 1093 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலமும், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு டி. வி. எகொடகே என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2004 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 02 ஆந்திகதியிடப்பட்ட 272 ஆம் இலக்க பிணை உறுதி மூலமும் பிணையாளி என்ற ரீதியில் 55/75, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் அமைந்துள்ள மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையால், பான் ஏஷியா பாங்கிங் கோப்பரேஷன் பீஎல்சீ (முன்னர் பான் ஏசியா பாங் லிமிட்டெட் என அழைக்கப்பட்டது) இற்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம்)*

பான் ஏஷியா பாங்கிங் கோப்பரேசன் PLC (முன்னர் பான் ஏஷியா பாங் லிமிட்டெட் மற்றும் பான் ஏசியா பாக்கிங் கோப்பரேஷன் லிமிட்டெட் என அழைக்கப்பட்டு வந்தது) யினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந்திகதி வியாழக்கிழமை மு. ப. 11.00 மணி தொடக்கம் எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்

**கொடுப்பனவு செய்யும் முறை.**-ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10&;
(2) உள்ளூர் அதிகார சபைக்கச் செலுத்தப்பட வேண்டிய 1& விற்பனை வரி ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5&;
(4) 90,000 ரூபாவுக்கு மேற்படாத வகையில் மொத்த விளம்பரச் செலவில் 50&;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90& விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

**இத்தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- தயவு செய்து 2005 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி வெளியான "சிலோன் டெயிலி

நியூஸ்", "லக்பிம" மற்றும் "சுடர் ஒளி" செய்திப் பத்திரிகைகளையும் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆந் திகதி வெளியான அரசாங்க வர்த்தமான அறிவித்தலையும் பார்வையிடவும்.

மேலதிக விபரங்களுக்கு.- உறுதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை, "சிரேஷ்ட முகாமையாளர், சட்டப் பிரிவு, பான் ஏஷியா பாங்கிங் கோப்பரேஷன்PLC, 450 காலி வீதி, கொழும்பு 3" எனும் முகவரியில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இலக்கங்கள் 2565573, 2565565.

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம,
I.S.O. 9001:2000 இலக்க தராதரமுடைய
பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர்,
பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும்
காணி செயல் முகவர்

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும்: |
|---|---|
| இல. 24, டொரிங்டன் வீதி, கண்டி, | இலக்கம் 290, ஹெவ்லொக் பாதை, கொழும்பு 05. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி 011-2585408, 011-2502680 |
| பெக்ஸ் இல. : 081-2224371 | பெக்ஸ் : 011-2588176 |
| ஈமெயில் : schokmankandy@sltnet.lk | ஈமெயில் : schokman@samera1892. com |

---

2-240

### செலான் வங்கி பீ எல் சீ – சொய்ஸாபுர கிளை

*1990 ஆம் ஆண்டின் வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் 4 ஆம் இலக்க சட்டத்தின் (விஷேட சரத்துக்கள்) 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**காணி ஏலவிற்பனை**

**மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம் சல்பிட்டி கோரளே பல்லேபத்துவ, மொறட்டுவ மாநகர சபை எல்லைக்குட்பட்ட லக்ஷபதிய, அபொன்சு மாவத்தை, இல. 38/3 இல் அமைந்துள்ள தியபரகஹஓவிட, வத்தேபொடஓவிட மற்றும் பொல்படயாகே கேள்ள அல்லது குறுந்துகஹவத்தை என்ழைக்கப்படுகின்ற தற்பொழுது விஸ்மா கார்ட்ன் என்றழைக்கப்படுகின்ற அனுமதி பெற்ற நில அளவையாளர் டி. சீ. ஆர். பர்னாண்டோவினால் 1970, செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதி உடைய எல்லைகள் வரையறை செய்யப்பட்ட வரைவு இலக்கம் : 89ஏ மற்றும் துண்டு இல. 8ஏ கொண்ட பத்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 10பே.) பரப்பளவு கொண்ட பெறுமதிவாய்ந்த காணி மற்றும் அதில் உள்ள மரம், செடி, கொடி கள் மற்றும் கட்டிடங்கள் அடங்கலாக உள்ள காணி. மேற்படி வரைவு இல. 89ஏ கொண்ட காணி கொழும்பு காணிப்பதிவகத்தில் M 1546/52 இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

**மேலும் குறித்த சொத்தை சென்றடைவதற்காக ஒதுக்கப் பட்டுள்ள அனுமதிபெற்ற நிலஅளவையாளர் டி. சீ. ஆர். பெர்னான்டோவினால் 1969.10.11 ஆந் திகதிய வரைவு இல. 89, துண்டு இல. 9 மற்றும் 10 இன் பிரகாரம் குறித்த சொத்தை சென்றடையும் பாதையையும் அதற்கான மின்சாரம், தண்ணீர் குழாய் மற்றும் கழிவு நீர் வெளியேற்றும் உபாதைகள் போன்ற வற்றை பயன்படுத்துவதற்கான முழுமையான உரிமை அடங்கலாக.**

*(கடன்பட்டார் என்ற வகையில் மொரட்டுவையைச் சேர்ந்த சுபசிங்க டொன் அசோகா சிசிர குமார ஜயவர்தன என்பவருக்கு வழங்கப்பட்ட சலுகைகளுக்காக செலான் வங்கி பீ எல் சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து. )*

மேலே விபரிக்கப்பட்ட காணியை நான் 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 04 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.

**ஆதனத்தை சென்றடைகின்ற விதம்.**- கொழும்பில் இருந்து காலி வீதியில் சுமார் 16 கி. மீ. தூரம் கட்டுபெத்த வரை சென்ற வலது புறமாகத் திரும்பி டிமெல் வீதியூடாக சுமார் 700 மீ தூரம் சென்று மீண்டும் வலது புறமாகத் திரும்பி அபொன்சு மாவத்தையில் உள்ள பாலத்தை தாண்டிய பின்னர் தொடர்ந்தும் சுமார் 200 மீ தூரம் சென்று வலது புறமாகவுள்ள10 அடி அகல வாகனப்போக்குவரத்து மண் பாதையில் சுமார் 40 மீ தூரம் சென்று குறித்த சொத்தை சென்றடையலாம்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2007.09.14 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2007.07.30 ஆந் திகதி "டெய்லிமிரர்" மற்றும் "லங்காதீப" மற்றும் 2007.08.14 ஆந் திகதிய "வீரகேசரி" நாளிதழ்களையும் பார்க்கவும்.

**கட்டணம் செலுத்தும் முறை.**- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் பின்வரும் தொகைகளைக் காசாக செலுத்தல் வேண்டும் :-

கொள்வனவு விலையின் பத்துவீதம் (10%); விற்பனைவரியாக உள்ளூர் அதிகாரசபைக்கு செலுத்த வேண்டியது ஒரு வீதம் (1%); ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2%); விற்பனை நிலத்துக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000; இலிகிதர் மற்றும் கூவுவோர் கூலி ரூபா 500; விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு; கொள்வனவு விலையில் மிகுதி 90 விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ எல் சீ வைப்புச்செய்தல் வேண்டும்.

காணி உறுதி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "கொழும்பு 3, காலி வீதி, இல. 90, செலான் வங்கி பீ எல் சீ, பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்)" இடமிருந்து பெற்றுக் கொள்ளவும் முடியும். தொலைபேசி : 2456285, 2456263, 2456284.

துசித கருணாரத்ன (ச. நீ),
அனுமதிபெற்ற அளவையாளர்,
நீதிமன்ற ஆணையாளரும், மதிப்பீட்டாளரும்

ரி. அன்ட் எச் ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ
தொலைபேசி : 2696155, 2572940

2-265

---

### தேசிய அபிவிருத்தி வங்கி பீ. எல். சீ

(முன்னர் வரையறுக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கி என அறியப்பட்டது.)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேஷட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்*

**பெறுமதிமிக்க வீடு மற்றும் காணி (கொட்டாவ, ஹைலெவல் வீதி, வரிமிதிப்பு இல. 105 ஜக் கொண்டது) ஏலவிற்பனை**

**( காணி விஸ்தீரணம் : 12.90 பேர்ச்சஸ்கள்**

*('கடனாளிகள்' ஆன லூக் கிளரன்ஸ் அபேநாயக்க மற்றும் யமுனா அருணா குமாரி அபேநாயக்க ஆகியோர் தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு (திருமதி) எஸ். டி. என். ஜயவர்தன அவர்களால்அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2006, ஓகத்து 31 ஆந் திகதியிடப்பட்ட பங்கீடு உறுதிஇல. 974 மற்றும் கொழும்பைச் சேர்ந்த நொத்தாரிசு (திருமதி) என். ஏ. எஸ். இலங்கோன் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2004, ஒற்றோபர் 7 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 1989 ஆகியவற்றின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள்.)*

தேசிய அபிவிருத்தி வங்கி பீ. எல். ஸீ. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆதனத்தை 2008, பெப்புருவரி 26 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**விவரணம்**.-மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கோறளை பள்ளே பற்று மஹரகம நகரசபை எல்லைக்குள் கொட்டாவவில் அமைந்துள்ளதும் தற்போது ஹைவெலவல் வீதி, வரிமதிப்பு 105 ஐக் கொண்டதும் முன்னர் ஹைலெவல் வீதி, வரிமதிப்பு இலக்கங்கள் 53, 53/1, மற்றும் 53/2 ஐக் கொண்டதும் "சம்புத்தி ஈரியகஹவத்தை" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சீ. எச். ஜீ. பெர்ணான்டோ அவர்களால் தயாரிக்கப்பட்டு 1998, யூலை 18 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 4512 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 2ஏ என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து.

***தீர்மான அறிவித்தலுக்கு***.- 2007.12.07 ஆந் திகதிய இலங்கை அரசாங்க வர்த்தமானியையும் 2007.11.23 ஆந் திகதிய "ஜலண்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளைப் காசாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் 10% (பத்து வீதம்) ; (2) உள்ளூர் அதிகார சபை கட்டணங்கள் 1% (ஒரு வீதம்) ; (3) ஏல தாரரின் கட்டணங்கள் 2 ½% ; (4) மொத்தத விளம்பரச் செலவு கட்டணங்கள் (5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500, விற்பனை நிபந்தனைகள் அத்தாட்சிப்படுத்துவதற்கான நொத்தாரிசு கட்டணம் 2,000 முதலியன.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

தயவு செய்து, உரித்து உறுதிகளையும் வேறு ஆவணங்களையும் பார்வையிடுவதற்காக "கொழும்பு 2, நவம் மாவத்தை, 40, மட்டம் 03, தேசிய அபிவிருத்தி வங்கி, பீஎல்சீ முகாமையாளர் - சட்டம் சம்பந்தமானது (அறவீடுகள்)" உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 2448448, 2437701, தொலைநகல் இல. 2440196.

பீ. கே. ஈ. சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்,
மற்றும் பட்டயம் பெற்ற ஏலதாரர்.

இல. 134, பத்தேகம வீதி,
கோட்டே
தொலைபேசி இல. 2873656, 0777-672082
தொலைநகல் இல. : 2871184

2-270